# ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol. 3. | MARCH, 1936 | No. 6[illegible]

[illegible] OFFICE OF THE [illegible] OF [illegible]
15 APR 1938
MADRAS

மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர் : சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள்,
மதுரை (S. I.)

தமிழ்நாடு
199512
OFFICE OF THE ...
15



# ஸ்ரீமத் பாகவதம்

ச்ருதி கீதை—தொடர்ச்சி.

முன் ஸஞ்சிகையில் பக்தி தான் மோக்ஷஸாதநம் என்று சொல்லப்பட்டது. அதையே மறுபடியும் சிலச்ருதிகள் த்ருடம் செய்கின்றன. அதனுல் ஞாநம் மோக்ஷஸாதநம் இல்லையென்று ஆகாது. ஞாநம் மோக்ஷஸாதநம்தான். அதை அடைவது ரொம்பவும் கஷ்டமாகாது. பரமாத்ம தத்வத்தை கண்டுபிடித்த மதாசார்யர்களுக்குள்ளாகவே எவ்வளவோ விவாதங்கள் இருந்து வருகின்றன. ஆகையால் எந்த மதாசார்யாளை ஆச்ரயித்து, எவ்விதம் தத்வத்தைத் தெரிந்துகொள்வது என்பது ரொம்பவும் ச்ரமமாக இருப்பதினுல் ராஜமார்க்கமான பக்தி யோகத்தை கைக்கொண்டு மோக்ஷத்தையடைவதில்தான் ப்ராணிகள் அதிகமாக ப்ரவ்ருத்திப்பார்கள் என்றதினுல் பக்தி யோகத்தையே மேன்மையாக வேதங்கள் வர்ணிக்கின்றன. அதாவது:—

जनिमसतो सतो मृतिमुतात्मनि येचभिदां
विपणमृतं स्मरन्त्युपदिशन्ति त आरुपितैः।
त्रिगुणमयः पुमान् इतिभिदा यद्बोधकृता
त्वयि नततः परत्र सभवेत् अवबोधरसे ॥

𑌜𑌨𑌿𑌮𑌸𑌤𑍋 𑌸𑌤𑍋 𑌮𑍃𑌤𑌿𑌮𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌯𑍇𑌚𑌭𑌿𑌦𑌾𑌂
𑌵𑌿𑌪𑌣𑌮𑍃𑌤𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌤 𑌆𑌰𑍁𑌪𑌿𑌤𑍈𑌃।

𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌮𑌯𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑌿𑌤𑌿 𑌭𑌿𑌦𑌾 𑌯𑌦𑌬𑍋𑌧𑌕𑍃𑌤𑌾
𑌤𑍍𑌵𑌯𑌿 𑌨 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌸 𑌭𑌵𑍇𑌦𑌵𑌬𑍋𑌧𑌰𑌸𑍇 ॥

(ஜநிமஸதோ ஸதோ ம்ருதிம் உதாத்மநி யேசபிதாம்
விபணம்ருதம் ஸ்மரந்த்யுபதிசந்தி த ஆருபிதை:|
த்ரிகுணமய: புமாந் இதி பிதா யதபோதக்ருதா
த்வயி நதத: பரத்ர ஸபவேத் அவபோதரஸே||)

பதவுரை :—

**असतः** (𑌅𑌸𑌤𑌃) அஸத: = உத்பத்திக்குமுன் இல்லாததான ஜகத்துக்கு,

**जनिं** (𑌜𑌨𑌿𑌂) ஜநிம் = உத்பத்தியை

**ये वैशेषिकाः** (𑌯𑍇 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑌾𑌃) யே வைசேஷிகா: = எந்த வைசேஷிகர்கள் (ஆதிகால தார்க்கிகர்கள்)

**वदन्ति** (𑌵𑌦𑌨𑍍𑌤𑌿) வதந்தி = சொல்கிறார்களோ

**येच पातञ्जलादयः** (𑌯𑍇𑌚 𑌪𑌾𑌤𑌞𑍍𑌜𑌲𑌾𑌦𑌯𑌃) யேச பாதஞ்ஜலாதய: = எந்த யோகிகளும்

**असतः** (𑌅𑌸𑌤𑌃) அஸத: = ஸாதன அநுஷ்டாநத்திற்குமுன் இல்லாததான ப்ரும்மபாவத்துக்கு

**जनिं** (𑌜𑌨𑌿𑌂) ஜநிம் = ஸாதன அநுஷ்டாநத்தினால் உத்பத்தியை

**वदन्ति** (𑌵𑌦𑌨𑍍𑌤𑌿) வதந்தி = சொல்கிறார்களோ

**ये नैयायिकाः** (𑌯𑍇 𑌨𑍈𑌯𑌾𑌯𑌿𑌕𑌾𑌃) யே நையாயிகா: = எந்த நவீநதார்க்கிகர்கள்

**सतः** (𑌸𑌤𑌃) ஸத: = ஸத்தான, 21 விதமான துக்கத்திற்கு (பஞ்சபூதம், பஞ்சஞானேந்த்ரியம், பஞ்ச கர்மேந்த்ரியம் பஞ்சவிஷயம், மனது)



**मृतिं** (𑌮𑍃𑌤𑌿𑌂) ம்ருதிம் = நாசத்தையே

**मोक्षं वदन्ति** (𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿) மோக்ஷம் வதந்தி = மோக்ஷம் என்று சொல்கிறார்களோ

**येच सांख्याः** (𑌯𑍇𑌚 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌃) யேச ஸாங்க்யா: = எந்த ஸாங்க்யர்களும் (ப்ரதான வாதிகள்)

**आत्मनि** (𑌆𑌤𑍍𑌮𑌨𑌿) ஆத்மநி = ஆத்மஸ்வரூபத்தில்

**भिदां** (𑌭𑌿𑌦𑌾𑌂) பிதாம் = பேதத்தை

**वदन्ति** (𑌵𑌦𑌨𑍍𑌤𑌿) வதந்தி = சொல்கிறார்களோ

**उत** (𑌉𑌤) உத = தவிரவும்

**येच मीमांसकाः** (𑌯𑍇𑌚 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌕𑌾𑌃) யேச மீமாம்ஸகா: = எந்த மீமாம்ஸகர்கள் (கர்மப்ரம்ம வாதிகளோ)

**विपणं** (𑌵𑌿𑌪𑌣𑌂) விபணம் = கர்மபலத்தை

**ऋतं** (𑌋𑌤𑌂) ருதம் = ஸத்யமாக

**वदन्ति** (𑌵𑌦𑌨𑍍𑌤𑌿) வதந்தி = சொல்கிறார்களோ

**ते सर्वेपि** (𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇𑌪𑌿) தே ஸர்வேபி = இந்த எல்லா வாதிகளும்

**आरुपितैः** (𑌆𑌰𑍁𑌪𑌿𑌤𑍈𑌃) = ப்ராந்திகளால்தான்

**सरन्ति** (𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌿) ஸ்மரந்தி = தாங்களும் அவ்விதம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்

**उपदिशन्तिच** (𑌉𑌪𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌚) உபதிசந்திச = அந்யர்களுக்கும் அவ்விதமே உபதேசம் செய்கிறார்கள்

**यत्** (𑌯𑌤𑍍) யத் = யாதொரு காரணத்தால்

**पुमान्** (𑌪𑍁𑌮𑌾𑌨𑍍) புமாந் = ஆத்மாவானது

त्रिगुणमयः (த்ரிகுணமய:) த்ரிகுணமய: = மூன்று குணங்களுக்கும் பரதந்த்ரன்

इति (இதி) இதி = என்ற காரணத்தால் ஏற்பட்ட

भिदा (பிதா) பிதா = பேதமானது

त्वयि अबोधकृता (த்வயி அபோதக்ருதா) த்வயி அபோதக்ருதா = உன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாத அக்ஞானத்தால் செய்யப்பட்டதோ

ततः (தத:) தத: = அந்த அபோதம் என்ற அக்ஞானத்திற்கு

परत्र (பரத்ர) பரத்ர = விலக்ஷணமான

अवबोधरसे (அவபோதரஸே) அவபோதரஸே = ஏகரஸமான ஆத்மஸ்வரூபத்தில்

सः (ஸ:) ஸ: அந்த அபோதம் (அக்ஞானம்)

न भवेत् (ந பவேத்) ந பவேத் = ஏற்படாது.

தாத்பர்யம்:—உபதேசம் செய்கிற மதாசார்யாள் வெவ்வேறுவிதமான ஸித்தாந்தத்தை அவலம்பித்தவர்களாக இருப்பதினால், எந்த மதாசார்யர்களை அவலம்பித்து, எவ்விதமான ஸித்தாந்தத்தைத்தான் முக்யமாக ஆச்ரயிக்கவேண்டியதென்பதை ப்ராக்ருதமான ஜனங்கள் அறிவது கஷ்டமானதினால், அவ்விதம் கஷ்டப்பட்டு ஞானத்தை ஸம்பாதிப்பதைக்காட்டிலும் பக்திமார்க்கமே ஸுலபமானது என்று சொல்வதற்கு, வாதிகளுடையவிப்ரதிபத்திகளை (வெவ்வேறு ஸித்தாந்தங்களை) ப்ரதர்சனம் செய்து ச்ருதிகளே நிராகரிக்கின்றன. அதாவது:—

வைசேஷிகர்கள் என்ற ப்ராசீனதார்க்கிகர்கள் ஆரம்பவாதத்தை அவலம்பித்து இந்த ஜகத்தானது உண்டாவதற்கு முன்



னால் இல்லவே இல்லை. ஈச்வரனுடைய இச்சையை அநுஸரித்து பரமாணுக்களால் பின்பு தான் உண்டுபண்ணப்பட்டது என்று சொல்கிறார்கள். இந்த ஸித்தாந்தத்தை அவலம்பித்தால், மனிதர்கள் நரகத்தைத்தான் அடையவேண்டும். உத்பத்திக்கு முன்னால் இல்லாமலிருந்தால், இல்லாததிற்கு உத்பத்தி உண்டா? இல்லாததிற்குக்கூட உத்பத்தியிருக்குமானால், முயற்கொம்புக்கும், மலடி மகனுக்கும் ஏன் உத்பத்தி இருக்கக்கூடாது? தவிரவும், தயிரில் இச்சையுள்ளவர்களும், மண்குடத்தில் இச்சையுள்ளவர்களும், பாலையும், மண்ணையுந்தான், தேடுகிறார்களே தவிர வேறொன்றையும் தேடவில்லை. இந்த அநுபவமானது ஆரம்பவாதம் சாஸ்த்ரஸம்மதமில்லை என்பதற்கு அத்தாக்ஷியாக ஆகிறது. தயிரை அபேக்ஷிக்கிறவர்கள் பாலையே எதிர்பார்க்கிறபடியால், தயிர் உண்டாவதற்கு முன்பு பாலிலேயே ஸூக்ஷ்மமாகத்தான் இருக்கிறதென்று எண்ணவேண்டாமா? அவ்விதம் பாலில் தயிர், தான் உண்டாவதற்கு முன்பு ஸூக்ஷ்மமாக இல்லாதபோனால், தயிர் வேண்டுமென்பவர்கள், பாலைத்தான் எதற்கு எதிர்பார்க்கவேண்டும்? ஒரு கல்லை எதிர்பார்க்கட்டுமே? ஆகையால் இந்த ஆரம்பவாதம் அஸத் கார்ய வாதமானபடியால் உபேக்ஷிக்கத்தகுந்தது. ஜகத் உண்டாவதற்கு முன்பும், தான் ஸத்ரூபமான ப்ரம்மமாகத்தான் இருக்கவே இருக்கிறது. सदेव सौम्य इदं अग्रे आसीत् (ஸதேவ ஸௌம்ய இதம் அக்ரே ஆஸீத்) (ஸதேவ ஸௌம்ய இதம் அக்ரே ஆஸீத்) என்ற ச்ருதிவாக்யத்தால் உத்தாலகர் என்ற மஹர்ஷி ச்வேதகேது என்ற தன் குமாரனுக்கு ஏ, ஸௌம்ய, இந்த ஜகத்தானது உத்பத்திக்கு முன்பு ஸத்ரூபமான ப்ரம்மமாக இருக்கத்தான் இருந்தது என்று உபதேசிக்கிறார். எப்போதும் ஜகத் காரணாத்மநா ஸத் தான். ஆகையால் ஆரம்பவாதமானது வேதவிருத்தமானதினால், ஆதரிக்கத் தகுந்ததல்ல.

அப்படியே, யோகிகளும் யோகாப்யாஸம் செய்வதற்கு முன்பு ஜீவன், ஈச்வரனில்லை. யோக மஹிமையினால்தான் ஜீவன் ஈச்வர பாவத்தை அடைகிறான் என்று சொல்கிறார்கள். அதுவும் ஆரம்ப வாதத்திற்கு ஸமானமாகத்தான் ஆகும், அயோகியாக இருக்கும் காலத்தில் அந்த ஜீவன் ஈச்வரனில்லையென்று சொல்லிவிட்டால் அவன் யோகியாக ஆனவுடன், யோக மஹிமையினால் மட்டும், அவனிடம் முன்பு இல்லாத ஈச்வரத்வம் எவ்விதம் ஸித்திக்கும். ஆரம்ப வாதத்தில் சொல்லிய ஸகல தோஷங்களும் யோகிகளுடைய ஸித்தாந்தத்திலும் ஒத்துவரும். ब्रह्मैव सन् ब्रह्माप्येति (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿) (ப்ரம்மைவ ஸந் ப்ரம்ம அப்யேதி) என்ற ச்ருதியோ, அக்ஞான தசையிலும் ஜீவன் ப்ரம்மம்தான் என்றுசொல்கிறது. ஜீவன் எப்போதும் ப்ரம்மம்தான். ஆகிலும் நித்யம் ப்ராப்தமான ப்ரம்ம பாவத்தில் அக்ஞானத்தால் அப்ராப்த ப்ரமம் ஏற்படுகிறது. அதினுடைய நிவ்ருத்திக்குத்தான் வேதங்களில் அதிகாரி பேத மூலமாக ஸாதனங்கள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இல்லாததான ப்ரம்மத்வமும் ஸாதனாநுஷ்டானத்தால் மட்டும் புதிதாக வந்துவிடுகிறது என்று சொல்கிற யோகிகளும் இல்லாததான ஜகத்திற்கு, புதிதாக உத்பத்தியைச் சொல்கிற வைசேஷிகர்களுக்கு பந்துக்களாகத்தான் ஆகுவார்கள். ஆகையால் அந்த ஸித்தாந்தத்தையும் ச்ரேயஸ்ஸை விரும்புகிறவர்கள் அவலம்பிக்கக்கூடாது. एतेनयोगः प्रत्युक्तः (𑌏𑌤𑍇𑌨𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃) (ஏதேந யோக: ப்ரத்யுக்த:) என்ற ஸூத்ரத்தால் வ்யாஸாசார்யாளும் ஸ்பஷ்டமாக ப்ரம்ம மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள்.

அப்படியே நவீநதார்க்கிகர்கள் என்ற நையாயிகர்கள் வேத விருத்தமாக ஸித்தாந்தம் செய்கிறார்கள். அதாவது, (ஸத்) இருக்கிற வஸ்துவுக்கு, நாசத்தைக்கல்பிக்கிறார்கள். முன் சொல்லிய இரு மதஸ்தர்களும் இல்லாத வஸ்துவுக்கு, உத்பத்தியை புதிதாக கல்பிக்கிறார்கள், இவர்களோ இருக்கும் வஸ்துவுக்கு நாசத்தைக் கல்பிக்கிறார்கள். ரொம்பவும் ப்ராக்ஞர்கள்.



नासतो विद्यते भावः, नाभावो विद्यते सतः ॥

(𑌨𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵𑌃, 𑌨𑌾𑌭𑌾𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑌤𑌃)

(நாஸதோ வித்யதே பாவ:, நாபாவோ வித்யதே ஸத:)

என்ற பகவத் வாக்யம் இவர்கள் காதில் எட்டவில்லைபோலிருக்கிறது. ஸத்தான வஸ்துவுக்கு நாசத்தைச் சொல்வதாயிருந்தால், ஈச்வரனுக்குக் கூட நாசத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த மஹா தோஷத்தை அவர்கள் கவனிக்கவேயில்லை. ப்ருத்வி, ஜலம், வாயு, ஆகாசம், வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தம், த்வக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், க்ராண, ரஸநம், சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம், மனது இந்த 21 தத்வங்களும் ஜீவனுக்கு துக்கத்தை உண்டுபண்ணுவதில் காரணமாயிருப்பதனால், இந்த 21 தத்வத்தையே துக்கமென்று பெயரிடுகிறார்கள். இதனுடைய நாசமே மோக்ஷம் என்று அவர்களுடைய ஸித்தாந்தம். சரீரம் போய்விட்டபிறகு ஆத்மா தனியாக காற்றாகப் பறப்பதே மோக்ஷமென்று சொல்கிற இந்த மதவாதிக்கு யாராலேதான் பதில் சொல்லமுடியும்? ஆகையால் இந்த நையாயிகர்களுடைய மதமும் முமுக்ஷுக்களுக்கு உபாதேயமாக ஆகாது.

அதுபோலவே ஜடமான ப்ரதானத்தை ஜகத்துக்கு காரணம் என்று சொல்கிற ஸாங்கயர்கள் ஒவ்வொரு சரீரத்துக்கும் ஒவ்வொரு ஆத்மா என்று சொல்கிறார்கள். அபேதமே அவர்களில் காதில் எட்ட ஸஹிக்கமாட்டார்கள். ஜீவனுக்கும், ஈச்வரனுக்கும் பேதத்

தை ஒப்புக்கொள்கிறார்கள். ஜீவ பரஸ்பர பேதத்தை ஒப்புக்கொள்கிறார்கள். ஜீவனுக்கும் ஜகத்திற்கும் பேதத்தை ஒப்புக்கொள்கிறார்கள். ஜகத்திற்குள் பரஸ்பர பேதத்தையும் ஒப்புக்கொள்கிறார்கள். இவ்விதமே எல்லா விஷயத்திலும் எல்லா இடங்களிலும், பேதபுத்தியுடனேயே காலத்தைக் கழிக்கிறார்கள். ஜீவனை ஒவ்வொரு சரீரத்திற்கும் வெவ்வேறு என்று ஒப்புக்கொள்கிறார்களே அதை அவர்கள் ஸரியாக ஸமர்த்தனம் செய்ய முடியுமா? முடியவே முடியாது.

ஜீவன், அணுவா, மத்யமபரிமாணமா (சரீரத்தினுடைய அளவு) அல்லது விபுவா (எங்கும் நிறைந்தது)? அணுவானால் கடுகுபோல சரீரத்தில் ஏதாவது ஒரு மூலையில் தானே இருக்கவேண்டும். எந்த இடத்தில் இருக்கிறானோ அந்த இடத்தில் மட்டும் முள் தைத்தாலோ ஊசியினால் குத்தினாலோ, வேதனை ஏற்படவேண்டுமே தவிர, மற்ற இடத்தில் ஏற்படலாமா? எல்லா இடங்களிலுமோ ஏற்படுகிறதே? அப்போது ஜீவனை எவ்விதம் அணுவாகச் சொல்லமுடியும்?

மத்யம பரிமாணம் என்று சொன்னாலோ சரீரம் எவ்வளவு பெரிதோ அதே அளவுதான் ஜீவனுக்கு ஏற்படுகிறபடியால், சரீரம் போய்விட்டால், ஜீவனும் போய்விடுகிறான் என்று சொல்லவேண்டும். அளவுக்கு மட்டும் சரீரத்தை ஒப்புக்கொண்டால், போதுமா? மற்ற எல்லா விதத்திலும் சரீரத்தின் ஸாம்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.

விபு என்ற பக்ஷத்திலும் ஆத்மாவை ஒன்றுதான் என்றுசொன்னால் தான், தான் முன்பு வரமுடியும். அநேகங்கள் என்று ஒப்புக்கொண்டால் கஷ்டம்தான் நேரிடும். அதாவது ஆத்மா விபுவாயும் அநேகங்களாயும் இருப்பதாக இருந்தால், ஒரே சரீரத்திலேயே



பூர்வபக்ஷம்:—‘श्रवणविधि’ ‘ஶ்ரவணவிதி’ (ச்ரவணவிதி)யை அனுஸரித்து அநுபந்த சதுஷ்டயத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்ட இந்த ‘अथातोब्रह्मजिज्ञासा’ ‘அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா’ (அதாதோப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்திற்கு வெளியாகவே இருந்துகொண்டுதான் இந்த ப்ரும்ம விசார சாஸ்த்ரத்தில் ஜிக்ஞாஸுக்களுடைய ப்ரவ்ருத்யங்கபூதமான அநுபந்த சதுஷ்டயத்தை நிர்ணயம் பண்ணுவது என்ற வ்யாஜத்தால் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கச் செய்கிறதா? அல்லது ப்ரும்மவிசார சாஸ்த்ரத்திற்குள் தானும் சேர்ந்ததாக இருந்து கொண்டேதான் அந்த சாஸ்த்ரத்தை ஆரம்பிக்கப்படுகிறதா? இரண்டு விதத்திலும் பெரிதான தோஷம் வருகிறது. அதாவது: முதல்பக்ஷத்தில் இந்த ஸூத்ரம் சாஸ்த்ரத்துக்கு வெளியில் இருப்பதால் இந்த ஸூத்ரத்துக்கு சாஸ்த்ர ஸம்பந்தமேயில்லை. அந்த சாஸ்த்ர ஸம்பந்தம் இல்லாதிருக்க அந்த ஸூத்ரம் மிகவும் ஹேயமென்று தீர்மானிக்கப்படுகிறது. இவ்விதம் ஹேயமான இந்த ஸூத்ரத்திலுள்ள ‘अथ’ ‘அத’ (அத) சப்தத்தால் ‘आनन्तर्य’ ‘ஆநந்தர்யம்’ (ஆநந்தர்யம்) என்ற அர்த்தம் மூலமாகப் போதிக்கப்படுகின்ற ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கும் ப்ரும்ம விசாரத்திற்கும் உள்ள ஸாதனபலபாவமானது வித்வஜ்ஜனங்களால் எப்படி ஆதரிக்கத்தகுந்ததாக ஆகும்? முன்கக்ஷிகளில் வெகு ப்ரயாஸத்தால் ‘अथ’ ‘அத’ (அத) சப்தத்திற்கு ஆநந்தர்யார்த்தத்தை ஸாதித்தும் அதில் பலாநுபவம் இல்லாமலே ஆய்விட்டது. சாஸ்த்ர ஸம்பந்தமில்லாத ஸூத்ரத்திலுள்ள ‘अथ’ ‘அத’ (அத) சப்தத்திற்கு ஆநந்தர்யார்த்தத்தை ஸ்தாபனம் பண்ணுகிற விஷயத்தில் ஏற்பட்ட புருஷப்ரயாஸம் வ்யர்த்தம் என்றது ஸித்தம்.

இரண்டாவது பக்ஷத்தில், இந்த ஸூத்ரம் சாஸ்த்ரத்துக்குள்ளேயே அடங்கியிருக்குமானால், ‘जन्माद्यस्ययतः’ ‘ஜந்மாத்யஸ்ய யத:’ (ஜந்மாத்யஸ்யயத:) என்றதுமுதலல்லவா சாஸ்த்ர ஆரம்பம். ஆகையால் जन्माद्यधिकरण, ஜந்மாத்யதிகரண (ஜன்மாத்யதிகரண)த்திற்கு முன்பே இந்த அதிகரணத்துக்கு ஸம்பந்தம் எப்படி ஏற்படும்? தான்

(இந்த ஸூத்ரம்) சாஸ்த்ரத்துக்குள்ளேயேயிருந்துகொண்டு சாஸ்த்ரத்துக்கே ஆரம்பகமாக எப்படியாகும்? தானே தனக்கு ஆரம்பகமாக எப்படியாகும்? அப்படியானால் தனக்குத்தானே காரணம் என்றதான ஆத்மாச்ரய தோஷம் வந்துவிடும். இந்த ஸூத்ரத்தைத் தவிர ப்ரும்மவிசார சாஸ்த்ரத்துக்கு ஆரம்பகமான வேறு ஸூத்ரம் இருக்குமோவென்று தேடினாலும் காணும். ப்ரும்மவிசார சாஸ்த்ர ஆரம்பகமாக இந்த ஸூத்ரம்தான் ஆகவேண்டியதாக இருக்கும். இந்த ஸூத்ரமோ சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்பட்டது என்று சொன்னாலும் தோஷமுள்ளதாக இருக்கிறது. சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்படவில்லையென்று சொன்னாலும் தோஷமுள்ளதாக இருக்கிறது.

ஆகையால், ஜிக்ஞாஸுக்களுடைய ப்ரவ்ருத்திக்கு அங்கமான அநுபந்த சதுஷ்டயத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்ட இந்த ஸூத்ரம் வ்யர்த்தம் என்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்:—இந்த ஸூத்ரம் ப்ரும்ம விசார சாஸ்த்ரத்துக்குள் அடங்கினதாக இருந்துகொண்டுதான் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தின் ஆரம்பத்தைச் சொல்லுகின்றது. 'स्वाध्यायो अध्येतव्यः' '𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋 𑌅𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃' (ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:) என்றது வேதாத்யயநம் செய்யவேண்டியது என்பதற்கு விதி. இந்த விதியோ வேதத்துக்கு உட்பட்டதாக இருந்துகொண்டுதான் வேதாத்யயநத்தின் ஆரம்பத்தை நிரூபணம் செய்கின்றது. அதுபோல், இந்த ஸூத்ரமும் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்துக்குள் அடங்கினதாக இருந்துகொண்டே ப்ரும்மவிசார சாஸ்த்ர ஆரம்பததைச் சொல்லலாம்.

ஆகையால், தானே தனக்கு ஆரம்பமாக ஆகுமா? அப்படியானால், 'आत्माश्रयं' '𑌆𑌤𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌂' (ஆத்மாச்ரயம்) என்ற தோஷம் வருகிறது என்று சொன்னது மிகவும் தப்பு. 'अथातो ब्रह्मजिज्ञासा' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரமானாலும், அது வ்யஷ்டியான



சாஸ்த்ரம். இது, ஸமஷ்டியான ப்ரும்மவிசார சாஸ்த்ரத்துக்கு ஆரம்பகமென்று சொல்லவேண்டும். வ்யஷ்டியே வ்யஷ்டிக்கு ஆரம்பகமாயும், ஸமஷ்டியே ஸமஷ்டிக்கு ஆரம்பகமாயும் இருக்குமேயானால், தனக்கே தான் ஆரம்பகம்என்ற ஆத்மாச்ரயதோஷம் வந்துவிடுகிறது என்று சொல்லலாம். வ்யஷ்டி சாஸ்த்ரம் ஸமஷ்டி சாஸ்த்ரத்துக்கு ஆரம்பமாக ஆகிறதற்காக ஆத்மாச்ரய தோஷம் வராது. இதுதான் 'स्वाध्यायो अध्येतव्यः' '𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋 𑌅𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃' (ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:) என்ற இடத்திலுள்ள அத்யயந விதியானது சாஸ்த்ரத்துக்குள் சேர்ந்துகொண்டே சாஸ்த்ராரம்பகமாக ஆனாலும் ஆத்மாச்ரய தோஷத்துக்கு அவகாசமேயில்லையென்று சொல்லும் வேதத்தின் பாஷ்யகாரரான சபர ஸ்வாமிகள் முதலானவர்களுடைய அபிப்ராயம். தவிர, ஸமந்வயம் முதலான ஸமஸ்தமான ப்ரும்மவிசார சாஸ்ரத்துக்கும் இந்த ஸூத்ரம் விஷய, ப்ரயோஜன, ஸம்பந்த, அதிகாரி யென்ற அநுபந்த சதுஷ்டயத்தை ப்ரகாசப்படுத்துவதென்ற காரணத்தால் உபோத்காதமானதால், (முகவுரை) ப்ரும்ம விசாரத்தின் முதலில் இந்த ஸூத்ரம் எழுதப்பட்டது.

இதில், "इदं सूत्रं, समन्वयाद्यखिलविचारोपोद्घातं, प्रेक्षावत्प्रवृत्त्यंगभूत आधिकार्यादिसमर्पकत्वात्, यन्नैवं, तन्नैवं, यथा जन्माद्यस्य इत्यादि सूत्रं" ॥ इदं सूत्रं, शास्त्रादौ संबद्धं, उपोद्घातत्वात्, यन्नैवं, तन्नैवं, यथा जन्माद्यस्य इत्यादि सूत्रं ॥ "𑌇𑌦𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑍍𑌯𑌖𑌿𑌲𑌵𑌿𑌚𑌾𑌰𑍋𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌂, 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌭𑍂𑌤 𑌆𑌧𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌮𑌰𑍍𑌪𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌯𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌤𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌯𑌥𑌾 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂". । 𑌇𑌦𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂, 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌯𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌤𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌯𑌥𑌾 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂. (இதம் ஸூத்ரம், ஸமந்வயாத்யகில விசாரோபோத்காதம், ப்ரேக்ஷாவத்ப்ரவ்ருத்யங்கபூத ஆதிகார்யாதி ஸமர்ப்பகத்வாத், யந்நைவம், தந்நைவம், யதா ஜந்மாத்யஸ்ய இத்யாதி ஸூத்ரம்) (இதம் ஸூத்ரம், சாஸ்த்ராதௌ ஸம்பத்தம், உபோத்காதத்வாத்,

யங்கைவம், தக்கைவம், யதா ஜந்மாத்யஸ்ய இத்யாதி ஸூத்ரம்) இவ்விதமான அனுமானந்தான் ப்ரமாணம்.

ஆகையால், இந்த ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்துக்குள் அடங்கினதாயிருந்தாலும் அனுபந்தசதுஷ்டயத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்டபடியால் சாஸ்த்ரத்தினுடைய ஆதியில் ஏற்பட்டிருக்கிறது. **'जन्माद्यस्य यतः'** '𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌯𑌤𑌃' (ஜன்மாத்யஸ்ய யத:) என்ற ஸூத்ரம்முதல் சாஸ்த்ராரம்பம். அதற்கு வெளியிலேயே இந்த ஸூத்ரம் இருப்பதால் அசாஸ்த்ரமோ என்ற எண்ணம் வேண்டாம். அநுபந்த சதுஷ்டயத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக இந்த ஸூத்ரம் ஏற்பட்டதால் இந்த ஸூத்ரம் உபோத்காதமாக ஆகிறது. உபோத்காதமோ சாஸ்த்ரத்தினுடைய ஆரம்பத்தில்தான் இருக்கவேண்டும். ஆகையால் இந்த ஸூத்ரத்துக்கு அசாஸ்த்ரத்வமும் இல்லை. சாஸ்த்ரத்துக்கு வெளியில் இருக்கக் கூடாது என்ற நிர்ப்பந்தமும் இல்லை. இந்த ஸூத்ரம் சாஸ்த்ராரம்பத்தில் இருப்பதே ஸரி; சாஸ்த்ரமும்தான் என்பது ஸித்தாந்திகளுடைய தீர்மானம்.

பூர்வபக்ஷம்:—**'अथातो ब्रह्मजिज्ञासा'** '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற இந்த ஸூத்ரம் வ்யாஸராற் செய்யப்பட்ட ஸூத்ரமாக ஆகாது. வ்யாஸராற் செய்யப்பட்ட ஸூத்ரங்களுள் ஒவ்வொரு ஸூத்ரமும் ப்ரும்மவிசாரபரமான ஸூத்ரம். அதாவது:—வ்யாஸரால் செய்யப்பட்ட ஸூத்ரங்களில் ஸகுணமோ, நிர்க்குணமோ எதாவது ஒரு ப்ரும்மம் விசாரிக்கப்படவேண்டும்; இந்த ஸூத்ரத்திலோ ப்ரும்மம் விசாரிக்கப் படவில்லை. ப்ரும்மவிசாரத்திற்கு யார் அதிகாரி? அதில் என்ன விஷயம்? அது எதில் ஸம்பந்தப்பட்டது? அந்த விசாரத்துக்கு என்ன பலன்? என்று அனுபந்த சதுஷ்டயமல்லவா விசாரிக்கப்படுகின்றது; ஆகையால், இந்த ஸூத்ரம் வ்யாஸாசார்யாளால் செய்யப் பட்டதாக ஆகாது. இதில், **'इदं सूत्रं, व्यासप्रणीतं, अब्रह्मविचारपरत्वात् यदित्थं, तत्तथा, यथा योगानुशासनं इत्यादि सूत्रं'** '𑌇𑌦𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌂, 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌚𑌾𑌰𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌯𑌦𑌿𑌤𑍍𑌥𑌂, 𑌤𑌤𑍍𑌤𑌥𑌾, 𑌯𑌥𑌾 𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌂 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂' (இதம் ஸூத்ரம், வ்யாஸாப்ரணீயம், அப்ரம்மவிசார பரத்வாத் யதித்தம், தத்ததா, யதா யோகாநுசாஸநம் இத்யாதி ஸூத்ரம்) என்ற அனுமானமே ப்ரமாணம். ஆகையால் இந்த ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்பட்டதன்று என்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.



ஸித்தாந்தம் :—இந்த ஸூத்ரம் வ்யாஸரால் செய்யப்பட்டது தான். ப்ரம்மவிசார சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்பட்டதுதான். ஸூத்ரத்திலேயே நேரில் ப்ரும்மம் விசாரிக்கப்படவேண்டுமென்ற நியமம் இல்லை. ஸகல ஸூத்ரங்களும் ச்ருதிகளுடைய அர்த்தத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்டவை. எந்த ச்ருதியினுடைய அர்த்தத்தை எந்த ஸூத்ரம் நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்டதோ, அந்த ஸூத்ரமும் ப்ரும்மபரமான ஸூத்ரம்தான். அதாவது:—ப்ரும்ம ஸம்பந்தமுள்ள ச்ருதியினுடைய அர்த்தத்தை நிர்ணயம் பண்ணுவதற்காக ந்யாயங்களை ஸூசனை செய்வதாக இருந்தாலே அந்த ஸூத்ரம் ப்ரும்மபரமான ஸூத்ரந்தான்.

இந்த **'अथातोब्रह्मजिज्ञासा'** '𑌅𑌥𑌾𑌤𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரமும் **'तद्विजिज्ञासस्व, सोन्वेष्टव्यः, सविजिज्ञासितव्यः, आत्मावारेद्रष्टव्यः, श्रोतव्यः, मन्तव्यः, निदिध्यासितव्यः'** '𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵, 𑌸𑍋𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃, 𑌸𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑌾𑌰𑍇𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃, 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃', (தத்விஜிக்ஞாஸஸ்வ, ஸோந்வேஷ்டவ்ய:, ஸவிஜிக்ஞாஸிதவ்ய:, ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய:, ச்ரோதவ்ய:, மந்தவ்ய:, நிதித்யாஸிதவ்ய:) என்ற ச்ருதிகளின் அர்த்தத்தை நிர்ணயம் செய்கின்றது. அந்த ச்ருதிகளோ ப்ரும்ம ஸம்பந்தமுள்ள ச்ருதிகள் என்றதில் ஸந்தேஹமில்லை. ப்ரும்ம வாசகமான **'तच्छब्द'** '𑌤𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌂' (தச்சப்தம்) அந்த ச்ருதிகளில் இருக்கும்பொழுது, அந்த ச்ருதிகளுக்கு ப்ரும்ம ஸம்பந்

தம் உண்டென்று சொல்லவும் வேண்டுமோ. அப்படி ப்ருப்மஸம்பந்தமுள்ள 'तद्विजिज्ञासस्व' '[illegible]' (தத்விஜிக்ஞாஸஸ்வ) என்றது முதலான ச்ருதிகளுடைய அர்த்தத்தை நிர்ணயம் பண்ணுகிறதற்காக அநேக ந்யாயங்களை இந்த ஸூத்ரம் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறது. 'साधन चतुष्टयसंपन्नः, ब्रह्मज्ञानानुकूल वेदान्तविचाराधिकारी, तत्साधनसंपन्नत्वात्, यः यत्साधनसंपन्नः, सः, तदधिकारी, यथा धर्मविचार साधन वेदाध्ययनसंपन्नः पुरुषः' '[illegible]' (ஸாதநசதுஷ்டய ஸம்பந்ந: ப்ரம்மஞாநாநுகூல வேதாந்த விசாராதிகாரீ, தத்ஸாதந ஸம்பந்நத்வாத், ய:, யத்ஸாதநஸம்பந்ந:, ஸ:, ததிதிகாரீ, யதா தர்மவிசாரஸாதந வேதாத்யயந ஸம்பந்ந: புருஷ:) இது அதிகாரியை நிர்ணயம் பண்ணக்கூடிய ந்யாயம்.

इदं शास्त्रं, प्रत्यगभिन्न ब्रह्मविषयकं, प्रत्यगात्म निष्टकर्तृत्वाध्यासरूप बन्धनिवर्तक ब्रह्मज्ञानजनकत्वात्, यदित्थं, तत्तथा, यथा इदमंशनिष्ठ रजताध्यास निवर्तक शुक्तिज्ञानजनक आप्तवाक्यम्' '[illegible]' (இதம் சாஸ்த்ரம், ப்ரத்யகபிந்ந ப்ரம்மவிஷயகம், ப்ரத்யகாத்மநிஷ்ட கர்த்ருத்வாத்யாஸரூப பந்தநிவர்த்தக ப்ரம்மஞாந ஜநகத்வாத், யதித்தம், தத்ததா, யதா, இதமம்சநிஷ்ட ரஜதாத்யாஸ நிவர்த்தக சுக்திஞாநஜநக ஆப்தவாக்யம்) இது விஷயத்தை நிர்ணயம் பண்ணும் ந்யாயம்.

"अयंविषयः, श्रुत्यैकसमधिगम्यः, मानान्तरागम्यत्वात्, स्वर्गादिवत्," "[illegible]" (அயம்விஷய: ச்ருத்யைகஸமதிகம்ய: மாநாந்தராகம்யத்வாத், ஸ்வர்காதிவத்) இது, ஸம்பந்தத்தை நிர்ணயம் பண்ணுகிற ந்யாயம்.



"इदं शास्त्रं, अविद्या निवृत्तिफलकं, ज्ञानजनकत्वात्, नायंसर्प इति वाक्यवत्" "[illegible]" (இதம் சாஸ்த்ரம், அவித்யா நிவ்ருத்திபலகம், ஞாநஜநகத்வாத், நாயம்ஸர்ப்ப இதிவாக்யவத்) இது, பலத்தை நிர்ணயம் பண்ணுகிற ந்யாயம்.

"साधनचतुष्टय संपत्तिः, संभाव्या, श्रुतत्वात् सन्ध्योपासनवत्" "[illegible]" (ஸாதனசதுஷ்டய ஸம்பத்தி:, ஸம்பாவ்யா: ச்ருதத்வாத், ஸந்த்யோபாஸநவத்) இது, ஸாதனசதுஷ்டய ஸம்பத்தியினுடைய ஸம்பாவனையை (ஸித்திக்கும் தன்மையை) நிர்ணயம் பண்ணுவதற்காக ஏற்பட்ட ந்யாயம்.

இவ்விதம் ச்ருத்யர்த்த நிர்ணயகமான ந்யாய ஸூசகமானதால் இந்த ஸூத்ரம் ப்ரம்மபரந்தான். ஆகையால் 'इदं सूत्रं, व्यासप्रणीतं, ब्रह्मपरश्रुत्यर्थ निर्णायक न्याय सूचकत्वात्, जन्माद्यस्य इत्यादिवत्' '[illegible]' (இதம் ஸூத்ரம், வ்யாஸப்ரணீதம், ப்ரம்ம பரச்ருத்யர்த்த நிர்ணயக ந்யாய ஸூசகத்வாத், ஜன்மாத்யஸ்ய இத்யாதிவத்) என்ற அநுமான ப்ரமாணத்தால், 'इदं सूत्रं, व्यासाप्रणीतं, अब्रह्मविचारपरत्वात् अथातोधर्मजिज्ञासा इत्यादिवत्' '[illegible]' என்று பூர்வபக்ஷியால் சொல்லப்பட்ட அநுமானம் அடிபட்டுவிட்டது. ஆகையால் 'ब्रह्मपरश्रुत्यर्थनिर्णायक' '[illegible]'

(ப்ரம்மபரச்ருத்யர்த்த நிர்ணயக) மான ந்யாய ஸூசகமானதால் இந்த ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்பட்டதுதான் என்பது ஸித்தாந்திகளின் ஸமாதானம்.

பூர்வபக்ஷம்:—‘अथातोब्रह्मजिज्ञासा’ ‘அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா’ (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தில் ஸம்பந்தப்பட்டதானாலும் இந்த முதல் அத்யாயத்தில் அந்த ஸூத்ரத்துக்கு ஸம்பந்தம் உண்டா? என்பதை விசாரிக்கவேண்டும். ப்ரும்மவிசார சாஸ்த்ரத்தில் அத்யாயம் நான்கு. அவற்றுள் முதல் அத்யாயத்திற்கு ஸமன்வயாத்யாயம் என்றும், இரண்டாவது அத்யாயத்திற்கு அவிரோதாத்யாயமென்றும், மூன்றுவது அத்யாயத்திற்கு ஸாதநாத்யாயமென்றும், நான்காவது அத்யாயத்திற்கு பலாத்யாயமென்றும் பெயர். ஸகல உபநிஷத்துகளுக்கும் ப்ரும்மத்தினிடத்தில்தான் பரமதாத்பர்யமே தவிர மற்றொரு வஸ்துவில் தாத்பர்யமில்லை என்றதை நிரூபணம் செய்வதற்காக ஸூத்ரங்கள் மூலமாக அந்தந்த உபநிஷத்துக்களை ஆகர்ஷணம் செய்துகொண்டு ப்ரும்மத்தினிடத்தில் அவைகளுக்கு ஸமந்வயத்தை நிரூபணம் செய்கின்ற அத்யாயமானதால் முதல் அத்யாயம் ஸமந்வயாத்யாயம் என்று சொல்லப்படும். அதாவது:—இந்த முதல் அத்யாயத்திலுள்ள ஒவ்வொரு ஸூத்ரங்களும் தனக்குத்தனக்குப் பழக்கமுள்ள அந்தந்த உபநிஷத்துக்களைக் கூட்டிக்கொண்டு வந்து ப்ரும்மத்தினிடத்திலேயே அவைகளின் தாத்பர்யத்தை விளங்கச்செய்கிற அத்யாயம் என்பது கருத்து.

இரண்டாவது அத்யாயத்தில், ஸகல உபநிஷத்துகளுக்கும் ப்ரும்மத்தினிடத்தில் தாத்பர்யத்தைச் சொன்னதிலிருந்தும் உபநிஷத்துகளுக்கு ப்ரும்மத்தினிடத்தில் தாத்பர்யம் இருப்பதற்காக ப்ரும்மம் விசார்யமாக ஆய்விடுமோ, உபநிஷத்துக்களுடைய ஸம்மதி ஸம்மதியாகவே ஆகாது; அந்த உபநிஷத்துக்களே ஒன்றோடொன்று ஒற்றுமையின்றி அடித்துக்கொண்டிருக்கின்றன; அவ்விதமிருக்க, அவைகளின் ஸம்மதியால் ப்ரும்மத்திற்கு ஒருமதிப்பும் வராதென்று ப்ரும்மத்தினிடத்தில் பரமதாத்பர்யமுள்ள உபநிஷத்துக்களுடைய



பரஸ்பர விரோதத்தை பூர்வபக்ஷிகள் ஆசங்கிக்க, அதைப் பரிஹாரஞ் செய்வதற்காக அநேக யுக்திகள் சொல்லப்படுகிறபடியால் அதற்கு அவிரோதாத்யாயமென்று பெயர்.

மூன்றுவது அத்யாயத்தில், ஸர்வ உபநிஷத்துக்களுக்கும் பரம தாத்பர்யவிஷயீபூதமான ப்ரும்மத்தினுடைய ஸாக்ஷாத்காரத்தையடைவதற்கான ஸாதனங்கள் சொல்லப்படுகிறபடியால் அதற்கு ஸாதனாத்யாயம் என்று பெயர்.

நான்காவது அத்யாயத்தில், ப்ரும்மஸாக்ஷாத்காரத்தின் பலன் வர்ணிக்கப்படுகிறபடியால் அதற்கு பலாத்யாயம் என்று பெயர்.

இவ்விதம் நான்கு அத்யாயங்களுக்குள் இந்த ஸூத்ரத்தை எந்த அத்யாயத்தில் சேர்க்கவேண்டும் என்று விசாரிக்க, முதல் அத்யாயமான ஸமந்வயாத்யாயத்தில் இந்த ஸூத்ரத்திற்கு ஸம்பந்தமே வராது என்றது ஸித்தமாகிறது. இந்த ஸூத்ரம் ஏதாவது தனக்குப்பழக்கமுள்ள சில உபநிஷத்துக்களை அழைத்துக்கொண்டு வந்து ப்ரும்மத்தினிடத்தில் அவைகளுக்கு ஸமந்வயத்தைப் ப்ரதிபாதனம் செய்கிறதென்றதைக் காணேம். ஆனல் இது ப்ரும்மவிசாரத்துக்கு விஷய, ப்ரயோஜன, ஸம்பந்த, அதிகாரியை மாத்திரம் நிர்ணயம் செய்வதற்காக ஏற்பட்ட ஸூத்ரம். ஆகையால் ‘ब्रह्मणिश्रुतिसमन्वय प्रतिपादनं’ “ப்ரஹ்மணிச்ருதிஸமந்வய ப்ரதிபாதநம்” (ப்ரம்மணிச்ருதி ஸமந்வய ப்ரதிபாதநம்) என்றது இந்த ஸூத்ரத்தில் இல்லாதபடியால், இந்த ஸூத்ரத்திற்கு ஸமந்வயாத்யாய ஸம்பந்தம் ஏற்படுவதற்கே ந்யாயம் இல்லை. “इदं सूत्रं, समन्वयाध्यायासंबद्धं, ब्रह्मविषयक श्रुति समन्वय प्रतिपादनपरत्वाभावात् नविलक्षणत्वादि सूत्रवत्” “இதம் ஸூத்ரம் ஸமந்வயாத்யாயாஸம்பத்தம் ப்ரஹ்மவிஷயக ச்ருதிஸமந்வய ப்ரதிபாதநபரத்வாபாவாத், நவிலக்ஷணத்வாதி ஸூத்ரவத்” (இதம் ஸூத்ரம், ஸமந்வயாத்யாய அஸம்பத்தம், ப்ரம்ம விஷயக ச்ருதிஸமந்வய ப்ரதிபாதக பரத்வாபாவாத், நவிலக்ஷணத்வாதி ஸூத்ரவத்) என்ற அநுமானமே இந்த ஸூத்ரம் ஸமந்வயாத்யாயத்தில்

ஸம்பந்தப்பட்டதில்லை யென்பதில் ப்ரமாணம் என்பது. பூர்வபக்ஷி களின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்:—இந்த ஸூத்ரத்திற்கு “ब्रह्मणिश्रुति समन्वय प्रतिपादन परत्वं” “𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨 𑌪𑌰𑌤𑍍𑌵𑌂” (ப்ரம்மணி ச்ருதிஸமந்வய ப்ரதிபாதந பரத்வம்) இல்லை யென்றது தப்பு. “तद्विजिज्ञासस्व, सोन्वेष्टव्यः, सविजिज्ञासितव्यः, आत्मावारे द्रष्टव्यः, श्रोतव्यः, मन्तव्यः, निदिध्यासितव्यः” “𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵 𑌸𑍋𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃, 𑌸𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑌾𑌰𑍇𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃, 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃” (தத்விஜிக்ஞாஸஸ்வ, ஸோந்வேஷ்டவ்ய:, ஸவிஜிக்ஞாஸிதவ்ய:, ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய:, ச்ரோதவ்ய:, மந்தவ்ய:, நிதித்யாஸிதவ்ய:) என்ற ச்ருதிகளுக்கு ப்ரும்மத்தினிடத்தில் ஸமந்வயத்தை ப்ரதிபாதனம் பண்ணுகிறதற்காகவே ஏற்பட்ட ஸூத்ரமல்லவா இது. ‘तद्विजिज्ञासस्व’ ‘𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵’ (தத்வி ஜிக்ஞாஸஸ்வ) என்ற ச்ருதியிலுள்ள ‘तत्’ ‘𑌤𑌤𑍍’ (தத்) என்ற சப்தத்தினுடைய அர்த்தம் ப்ரும்மம்தான் என்றதை ந்யாயத்தால் விளக்கி, அந்த ச்ருதிக்கு ப்ரும்மத்தை யறியவேண்டுமென்று சொல்வதில்தான் தாத்பர்யம் என்றதை ப்ரகாசப்படுத்தி, அதன்மூலம் அந்த ச்ருதிக்கு ப்ரும்மத்தினிடத்தில் ஸமந்வயத்தை ப்ரதிபாதனம் பண்ணுகிறதே இந்த ஸூத்ரம்; அது போதாதா! ஆகையால் இந்த ஸூத்ரம் ஸமந்வயாத்யாயத்தில் ஸம்பந்தப்பட்டதுதான். “इदंसूत्रं, समन्वयाध्यायसंबद्धं, ब्रह्मविषयक श्रुतिसमन्वय प्रतिपादनपरत्वात्, आनन्दमयोभ्यासात् इत्यादिवत्” “𑌇𑌦𑌂𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌕 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍” (இதம் ஸூத்ரம், ஸமந்வயாத்யாய ஸம்பத்தம், ப்ரம்மவிஷயக ச்ருதிஸமந்வய ப்ரதிபாதந பரத்வாத், ஆநந்தமயோப்யாஸாத் இத்யாதிவத்) என்ற அனுமான ப்ரமாணத்தால் இந்த ஸூத்ரத்திற்கு ஸமந்வயாத்யாய ஸம்பந்தத்தை ஸாதிக்கின்றோம் என்பது ஸித்தாந்திகளின் ஸமாதானம்.



பூர்வபக்ஷம்:—இந்த ஸூத்ரம் முதல் பாதத்தில் ஸம்பந்தப் பட்டதா? இல்லையா? என்றதை விசாரிக்கவேண்டும். ப்ரும்மவிசார சாஸ்த்ரம் என்ற இந்த சாஸ்த்ரத்தில் ‘समन्वयं, अविरोधं, साधनं, फलं’ ‘𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌂, 𑌅𑌵𑌿𑌰𑍋𑌧𑌂, 𑌸𑌾𑌧𑌨𑌂, 𑌫𑌲𑌂’ (ஸமந்வயம், அவிரோதம், ஸாதநம், பலம்) என்று நான்கு அத்யாயங்கள். அவைகளுள் ஒவ்வொரு அத்யாயத்திலும் நந்நான்கு பாதங்கள். அவற்றுள், முதல் அத்யாயத்திலுள்ள நான்கு பாதங்கள் இன்னவென்று விசாரிப் போம். ஸ்பஷ்டமாக ப்ரும்மத்தினுடைய ஸ்வரூபத்தைத்தான் இந்த ச்ருதிகள் சொல்லுகின்றன; ஆகிலும் அது ஸகுணப்ரும்மமா? நிர்க்குண ப்ரும்மமா? என்றது மாத்திரம் நிச்சயமாய்த் தெரிய வில்லை என்று எண்ணக்கூடிய ச்ருதிகள் எவையோ, அவை ஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யங்கள் என்று சொல்லப்படும். அந்த ஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யங்கள் என்ற ச்ருதிகளுக்கு ப்ரும்மத்தினிடத்தில் தாத்பர்யத்தை நிரூபணம் பண்ணுகிறதற்காக ஏற்பட்ட பாதமான தால், இந்த முதல் பாதத்திற்கு ‘स्पष्टब्रह्मलिंगवाक्यसमन्वयं’ ‘𑌸𑍍𑌪𑌷𑍍𑌟 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌂𑌗𑌵𑌾𑌕𑍍𑌯 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌂’ (ஸ்பஷ்ட ப்ரம்மலிங்க வாக்ய ஸமந்வயம்) என்று பெயர். அதாவது: இந்தப் பாதத்தில் ஸகுண ப்ரும்ம நிர்க்குண ப்ரும்மங்களைப்பற்றி வாதம்.

இரண்டாவதுபாதம்: ப்ரும்மத்தைத்தான் சொல்லுகிறது என்றது ஸ்பஷ்டமாகத் தெரியாமலே இருக்கின்ற சில ச்ருதிகள் உண்டு; ஆனால் அவைகள் உண்மையில் ப்ரும்மத்தைத்தான் சொல்லும்; ஸ்பஷ்டமாக அது வெளிக்குத் தெரியாது. அப்படியுள்ள ச்ருதிக ளில் நிர்க்குண ப்ரும்மத்தைச் சொல்லுகிற ச்ருதிகளும் சில உண்டு. ஸகுண ப்ரும்மத்தைச் சொல்லுகிற ச்ருதிகளும் சில உண்டு. அப் படி ஸகுண ப்ரும்மத்தைச் சொல்லுகிற ச்ருதிகளிலும் ஸ்பஷ்டமாக ப்ரும்மத்தைத்தான் சொல்லுகிறதென்றது தெரியாததால், ஸகுண ப்ரும்மமா? மாயை முதலியனவா? என்ற ஸந்தேஹம் உண்டு. அவை களைப்பற்றி இந்த இரண்டாவது பாதத்தில் விசாரிக்கப்படுகிறது. அதாவது: ஸகுணப்ரும்மம், மாயை இந்த இரண்டையும்பற்றி ஏற் பட்ட விசாரம் இரண்டாவது பாதத்தில். அஸ்பஷ்டமான உபாஸ்ய

ப்ரும்மலிங்க வாக்யங்களுக்கு ப்ருமத்தினிடத்தில் தாத்பர்யத்தை இந்தப்பாதத்தில் நிரூபணம் பண்ணுகிறபடியால் இந்த இரண்டாவது பாதத்திற்கு 'अस्पष्टोपास्य ब्रह्मलिंगवाक्य समन्वयं' '𑌅𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌾𑌕𑍍𑌯 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌂' (அஸ்பஷ்டஉபாஸ்ய ப்ரம்மலிங்கவாக்ய ஸமந்வயம்) என்று பெயர்.

மூன்றுவது பாதத்தில், ஞேயமான நிர்க்குண ப்ரம்மத்தைச் சொல்லுகிற சில ச்ருதிகளில் நிர்க்குண ப்ரும்மத்தைத்தான் சொல்லுகிறதுஎன்றது ஸ்பஷ்டமாகத் தெரியாதபடியால், அவைகள் நிர்க்குண ப்ரும்மத்தைத்தான் சொல்லுகின்றனவோ, அல்லது மாயை முதலியவைகளைச் சொல்லுகின்றனவோ என்ற ஸந்தேஹம் உண்டாகின்றது. அப்படி ஸந்தேஹமுள்ள ச்ருதிகளை எடுத்துக்கொண்டு இந்த ச்ருதிகளுக்கு நிர்க்குண ப்ருமத்தினிடத்தில் தாத்பர்யமா? மாயை முதலியவைகளிடத்திலா' என்றது இந்தப் பாதத்தில் விசாரிக்கப்படுகிறது. இந்தப் பாதத்தில் அஸ்பஷ்டமான ஞேயப்ரும்மலிங்க வாக்யங்களுக்கு ப்ரும்மத்தினிடத்தில் தாத்பர்யத்தை நிரூபணஞ் செய்கிறபடியால் 'अस्पष्टज्ञेय ब्रह्मलिंगवाक्य समन्वयं' '𑌅𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑍇𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌾𑌕𑍍𑌯 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌂' (அஸ்பஷ்டஞேய ப்ரம்மலிங்கவாக்ய ஸமந்வயம்) என்று இந்த மூன்றுவது பாதத்திற்குப் பெயர்.

நாலாவது பாதத்தில், இரண்டாவது பாதத்திலும், மூன்றுவது பாதத்திலும், ப்ரதானவாதிகளால் (மாயாகாரணவாதி) தம் பக்ஷத்திற்கு ஸாதகமாக ப்ரகாசப்படுத்தப்பட்ட அநேக ச்ருதிகளிலுள்ள சில பதங்களுக்கு அர்த்தம் இன்னதென்று தெரிந்துகொள்ளாமலே ஹடத்தால் (ஸரியான காரணமில்லாமல்) மாயாவாதத்தை நிராகரணம் செய்து வேதாந்திகளால் ப்ரும்மவர்தமானது ஸ்தாபனஞ் செய்யப்பட்டது. அது மிகவும் பொருத்தமில்லாதது. ப்ரதானவாதிகளால் தம் பக்ஷத்திற்கு ஸாதகமாக எடுத்துக்காட்டப்பட்ட ச்ருதிகளிலுள்ள பதங்களுள் சிலவற்றின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு செய்கிற ஸித்தாந்தமல்லவா ஸரியான ஸித்தாந்தம். ப்ரதான வாதிகளுடைய ச்ருதியில் இருக்கும் 'अव्यक्तं, अजा, अजः'



'𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂, 𑌅𑌜𑌾, 𑌅𑌜𑌃' (அவ்யக்தம், அஜா, ஜந:) என்றவைகளான சில பதங்களுக்கு அர்த்தம் இன்னவென்றே வேதாந்திகளுக்குத் தெரியாது. அவ்விதம் ஸந்திக்தமான அவ்யக்தம், அஜா, ஜந: என்ற பதங்களின் அர்த்தத்தை விசாரிக்க ஏற்பட்ட பாதம் நான்காவது பாதம். இதில் सन्दिग्ध, 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மான अव्यक्तं, 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 (அவ்யக்தம்) முதலான பதங்களுக்கு ப்ரும்மத்தினிடத்திலேயே தாத்பர்யத்தை நிரூபணஞ் செய்கிறபடியால் இந்த நான்காவது பாதத்திற்கு 'सन्दिग्ध अव्यक्तादि पदसमन्वयं' '𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑌿𑌪𑌦𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌂' (ஸந்திக்த அவ்யக்தாதி பதஸமந்வயம்) என்று பெயர்.

இவ்விதம் சொல்லப்பட்ட நான்கு பாதங்களுள், எந்தப்பாதத்தில் இந்த 'जिज्ञासा' '𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (ஜிக்ஞாஸா) ஸூத்ரத்துக்கு ஸம்பந்தம் என்றதை ஆலோசிக்கவேண்டும். 'जिज्ञासाधिकरणं' '𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌂' (ஜிக்ஞாஸாதிகரணம்) 'तद्विजिज्ञासस्व' '𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵' (தத்விஜிக்ஞாஸஸ்வ) என்றது முதலான ச்ருதிகளின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்காக ஏற்பட்டது என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. 'तद्विजिज्ञासस्व' '𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵' (தத்விஜிக்ஞாஸஸ்வ)என்றது முதலான ச்ருதிகளிலோ ப்ரும்மந்தான் சொல்லப்படுகிறது என்று ஸ்பஷ்டமாகத்தெரியவில்லை. ஆகையால் அந்த ச்ருதிகள் अस्पष्टब्रह्मलिंग, 𑌅𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗 (அஸ்பஷ்ட ப்ரம்மலிங்க) வாக்யங்கள். இவ்விதம் அஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யத்தை நிர்ணயம் செய்வதற்காக வந்த இந்த जिज्ञासाधिकरणं, 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 (ஜிக்ஞாஸாதிகரணம்) ஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யத்தின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்கு ஏற்பட்ட இந்த முதல் பாதத்தில் ஸம்பந்தப்பட்டதாக ஆகாது. "इदं सूत्रं, प्रथमपादासंबद्धं, अस्पष्ट ब्रह्मलिंगवाक्यार्थ निर्णायक न्याय सूचकत्वात्, गुहां प्रविष्टावात्मानौ इत्यादिवत्" "𑌇𑌦𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌾𑌦𑌾𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂, 𑌅𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌰𑍍𑌣𑌾𑌯𑌕 𑌨𑍍𑌯𑌾𑌯 𑌸𑍂𑌚𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌗𑍁𑌹𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍" (இதம் ஸூத்ரம், ப்ரதம பாதாஸம்பத்தம், அஸ்பஷ்ட ப்ரம்மலிங்க வாக்யார்த்த நிர்ணயக

ந்யாய ஸூசகத்வாத், குஹாம் ப்ரவிஷ்டா ஆத்மாநௌ இத்யாதிவத்) என்ற அனுமானமே இந்த ஸூத்ரம் முதல்பாதத்தில் சேரக்கூடாதென்பதற்கு ப்ரமாணம். ஆகையால், 'अथातो ब्रह्मजिज्ञासा' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற அதிகரணம் இந்த முதல் பாதத்தில் வர ந்யாயமில்லையென்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்:—'तद्विजिज्ञासस्व' '𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵' (தத்விஜிக்ஞாஸஸ்வ) என்றது முதலான ச்ருதிகள் अस्पष्टब्रह्मलिंगवाक्यम्, 𑌅𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 (அஸ்பஷ்ட ப்ரம்மலிங்க வாக்ய)ங்களாக ஆகா. அவைகளில், ப்ரும்மத்தைப் போதிக்கின்ற 'तत्' '𑌤𑌤𑍍' (தத்) என்ற சப்தமானது ஸ்பஷ்டமாக இருக்கின்றது. அந்த 'तत्' '𑌤𑌤𑍍' (தத்) என்ற சப்தம் ப்ரும்மத்தைத் தவிர மற்றொன்றைப் போதிக்காது. அவ்விதம் இருக்கிற 'तत्' '𑌤𑌤𑍍' (தத்) என்ற சப்தமே ஸ்பஷ்டமான ப்ரும்மலிங்கம். ஆகையால் இந்த வாக்யங்கள் ஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யங்கள் தான். ப்ரும்மமோ, மாயை முதலியவைகளான மற்றொன்றோ, என்ற ஸந்தேஹம் இந்த வாக்யங்களில் வராது. ப்ரும்மம்தான் என்பது நிச்சயம். ஆனால், ஆத்மாவைக்காட்டிலும் அந்த ப்ரும்மம் வேறு? வேறில்லையா? அது ஸகுணமா? நிர்க்குணமா? என்ற ஸந்தேஹங்கள் மாத்திரம் உண்டு. ஆகையால், இந்த வாக்யங்களை அஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யங்களோ என்று ஸந்தேஹிக்கிறதற்குக் கொஞ்சமேனும் இடமில்லை. ஸ்பஷ்ட ப்ரும்மலிங்க வாக்யங்கள்தான். இவைகளின் அர்த்தத்தை நிர்ணயம் செய்கிறதற்காக ஏற்பட்ட ந்யாயஸூசகமான ஸூத்ரமானதால்; இந்த 'अथातो ब्रह्मजिज्ञासा' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் இந்த ஸ்பஷ்ட ப்ரும்மலிங்கவாக்ய ஸமந்வயபாதத்தில்தான் இருக்கவேண்டும். 'इदं सूत्रं, प्रथमपादसंबद्धं, स्पष्ट ब्रह्मलिंगवाक्यार्थ निर्णायक न्याय सूचकत्वात्, जन्माद्यस्य इत्यादिवत्' '𑌇𑌦𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂, 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌾𑌦𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂, 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌰𑍍𑌣𑌾𑌯𑌕 𑌨𑍍𑌯𑌾𑌯 𑌸𑍂𑌚𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯



199512

𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍' (இதம் ஸூத்ரம், ப்ரதமபாத ஸம்பத்தம், ஸ்பஷ்ட ப்ரம்மலிங்க வாக்யார்த்த நிர்ணயக ந்யாய ஸூசகத்வாத், ஜந்மாத்யஸ்ய இத்யாதிவத்) என்ற அனுமானந்தான் இந்த ஸூத்ரம் முதல் பாதத்தில் ஸம்பந்தப்பட்டது என்பதற்கு ப்ரமாணம். ஆகையால், இந்த अधिकरणं, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 (அதிகரணம்), समन्वयपादं, 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌪𑌾𑌦𑌂 (ஸமந்வயபாதம்) என்ற முதல் பாதத்தில்தான் இருக்கவேண்டும் என்பது ஸித்தாந்திகளின் ஸமாதானம்.

பூர்வபக்ஷம்:—'अथातो ब्रह्मजिज्ञासा' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்றது अधिकरण, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 (அதிகரண)மா? அல்லது கேவல ஸூத்ரந்தானா? என்றதை விசாரிக்க வேண்டும். सन्दिग्ध, 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மான ச்ருத்யர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்கு அநேக ந்யாயங்களை உள் அடக்கி வைத்துக் கொண்டு ஏற்பட்ட ஸூத்ரங்களெல்லாம் अधिकरण, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 (அதிகரண)மான ச்ருத்யர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்காக எத்தனை ந்யாயங்கள் அடங்கியிருக்கின்றனவோ அந்த ந்யாயங்களெல்லாம் ச்ருதிகளால் அநுக்ரஹிக்கப்பட்டதாக இருந்தால்தான் सन्दिग्ध, 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மான ச்ருத்யர்த்தத்தை நிர்ணயம் பண்ணிக்கொடுக்கிற விஷயத்தில் ஸாமர்த்ய முள்ளவைகளாக ஆகும்.

ஆகையால் அந்த ந்யாயங்களுக்கு உதவி செய்கின்ற ச்ருதிகளும் சில வேண்டும். அவைகளோ நிர்விவாதமான அர்த்தத்தைப் போதிப்பதாக இருக்கவேண்டும். அதாவது: அவைகளின் அர்த்தத்தில் ஸந்தேஹம் வரக்கூடாது. அவ்விதமான ச்ருதிகளின் அர்த்தத்தை ப்ரகாசப்படுத்துகிறதற்காக ஏற்பட்ட ஸூத்ரங்கள் கேவல ஸூத்ரமென்று சொல்லப்படும்.

அதாவது: असन्दिग्ध श्रुत्यर्थ प्रकाशक, 𑌅𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕 (அஸந்திக்த ச்ருத்யர்த்த ப்ரகாசக)மான ஸூத்ரங்கள் கேவல ஸூத்ரங்கள். अधिकरण, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 (அதிகரண)ங்களில் ஐந்து தத்வங்கள் அடங்கியிருக்க வேண்டும். அவையாவன:—

**विषयं, संशयं पूर्वपक्षं, सिद्धांतपक्षं, संगति,** 𑌵𑌿𑌷𑌯𑌂, 𑌸𑌂𑌶𑌯𑌂, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌂, 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌪𑌕𑍍𑌷𑌂, 𑌸𑌂𑌗𑌤𑌿 (விஷயம், ஸம்சயம், பூர்வ பக்ஷம், ஸங்கதி) என்பன. அதாவது: அதிகரணம் என்றால் ஒரு **सन्दिग्ध,** 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மான ச்ருத்யர்த்தத்தை நிர்ணயம் செய்கிறதற்கல்லவா ஏற்பட்டது. அந்த **सन्दिग्ध** 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மான ச்ருத்யர்த்தங்கள் விஷயம் என்று சொல்லப்படும். அந்த விஷயங்களைப்பற்றி, (அப்படியா இப்படியா என்று) ஏற்படும் விகல்பம் **संशयं,** 𑌸𑌂𑌶𑌯𑌂 (ஸம்சயம்) என்று சொல்லப்படும். ப்ரதிவாதிகளின் எதிர்வாதம் பூர்வபக்ஷம். ஸித்தாந்திகளின் ஸமாதானம் ஸித்தாந்த பக்ஷம். இதற்குமுன் ஏதாவதொரு விஷயத்தைக்குறித்து ஏற்பட்டிருக்கும் ஸித்தாந்தத்திற்குமேல் ஏற்படும் ஆக்ஷேபமோ, அல்லது அந்த ஸித்தாந்தத்தை ப்ரமாணமாக வைத்துக்கொண்டு வேறுவிதமான ப்ரதிவாதிகளின் எதிர்வாதமோ, ஏற்படுகிறது என்பதற்காக இந்த ஸூத்ரம் ஆரம்பிக்கப்படுகிறது என்பது ஸங்கதி.

இவ்விதம் ஐந்து தத்வங்கள் எந்த ஸூத்ரத்தில் அடங்கியிருக்கின்றனவோ அதுதான் அதிகரணமாகும். இந்த **'अथातोब्रह्मजिज्ञासा'** '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரத்தில் **'तद्विजिज्ञासस्व'** '𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵' (தத்விஜிக்ஞாஸஸ்வ) என்றது முதலிய ச்ருதிகளால் அநுபந்த சதுஷ்டயம் விஷயமென்று ஸூசிப்பிக்கப்படுகின்றது. ஆகையால் விஷயம் அடங்கியிருக்கின்றது. அந்த விஷயத்தைப்பற்றியும், ஸாதனசதுஷ்டய ஸம்பந்நனான புருஷன்தான் அதிகாரியா? அல்லது வேதாத்யயநம் செய்த புருஷன் அதிகாரியா என்றும், ஜீவன் விஷயமா? அல்லது ப்ரும்மம் விஷயமா? அல்லது ஜீவப்ரும்ம ஐக்யம் விஷயமா? என்றும், இந்த விஷயமானது ச்ருதிகளால் போதிக்கப்படுகிற விஷயமா? அல்லது வேறு ப்ரமாணாந்தரத்தால் போதிக்கப்படுகிற விஷயமா? என்றும், மோக்ஷமானது வேதாந்த விசாரத்தால்தான் உண்டாகவேண்டுமோ? அல்லது வேறு உபாயாந்தரத்தாலும் ஸாத்யமா? என்றும் நாலுவிதமான ஸம்சயங்களும் இந்த ஸூத்ரத்தில் அடங்கியிருக்கின்றன. வேதாத்யயநஞ் செய்தவன் அதிகாரி, ஜீவனைக்காட்டிலும் வேறான ப்ரும்மம்



விஷயம். இந்த விஷயம் ப்ரமாணாந்தரத்தாலே போதிக்கக்கூடியதுதான், மோக்ஷம் உபாயாந்தரத்தாலும் வரக்கூடியதுதான்; என்ற பூர்வபக்ஷமும் அடங்கியிருக்கின்றது. ஸாதனசதுஷ்டய ஸம்பத்தியுள்ளவன்தான் அதிகாரி. ஜீவப்ரும்ம ஐக்யம் விஷயம். இந்த விஷயம் ச்ருதியினாலே மாத்ரம் சொல்லப்படும் விஷயம். அவித்யா நிவ்ருத்தியென்ற மோக்ஷமே பலம் என்ற ஸித்தாந்தமும் இந்த அதிகரணத்தில் அடங்கியிருக்கின்றது.

இவ்விதம், விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், உத்தரபக்ஷம் என்ற நான்கும் இந்த அதிகரணத்தில் இருந்தாலும், **संगति,** 𑌸𑌂𑌗𑌤𑌿 (ஸங்கதி) என்ற முக்யமான **अधिकरण,** 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 (அதிகரண) லக்ஷணம் இந்த அதிகரணத்தில் இல்லை. **'संगति'** '𑌸𑌂𑌗𑌤𑌿' (ஸங்கதி) என்பதற்கு, முன் அதிகரணத்திற்கும் பின்னுள்ள அதிகரணத்துக்கும் உள்ள ஸம்பந்தம் என்பது அர்த்தம். எப்படியென்றால், முன் தீர்மானிக்கப்பட்ட ஒரு ஸித்தாந்தத்தின்பேரில் ஏற்படும் பூர்வபக்ஷிகளுடைய எதிர்வாதத்திற்கு ஸரியான பதிலைச்சொல்லி, அந்தப் பூர்வபக்ஷிகளின் அபிப்ராயத்தை நிராகரிக்க அநேக ந்யாயங்களுடன் கூடியிருக்கிற **अधिकरणं,** 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 (அதிகரணம்) எதுவோ! அந்த அதிகரணத்திற்கும், முன் அதிகரணத்திற்கும் உள்ள ஸங்கதி **आक्षेप संगति;** 𑌆𑌕𑍍𑌷𑍇𑌪𑌸𑌂𑌗𑌤𑌿 (ஆக்ஷேபஸங்கதி) என்று சொல்லப்படும். அதுபோலவே **प्रत्युदाहरणं, दृष्टान्तं,** 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌣𑌂, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌂 (ப்ரத்யுதாஹரணம், த்ருஷ்டாந்தம்) முதலான அநேகவிதமான ஸங்கதிகளும் உண்டு. அதாவது: முன் அதிகரணத்திற் செய்த ஸித்தாந்தத்தை ஆக்ஷேபித்துவரும் வாதங்களுக்கு பதில் சொல்லுவதற்காகவும் சில அதிகரணங்கள் ஏற்படலாம். சில அதிகரணங்கள் முன் ஸித்தாந்திக்கப்பட்ட ஸித்தாந்தத்தை த்ருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு விஷயாந்தரத்தில் ஆக்ஷேபிக்கும் வாதிகளுக்கு ஸமாதானம் செய்வதற்காகவும் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி **'अथातो ब्रह्म-जिज्ञासा'** '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரத்தால் ஏதாவது முன் தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயத்தின் எதிர்வாதக்கக்ஷிக்கு பதிலாவது சொல்லப்பட வேண்

டுப்; அல்லது முன் சொல்லப்பட்ட ஸித்தாந்தத்தை த்ருஷ்டாந்த மாக வைத்துக்கொண்டு வேறு விஷயாந்தரத்தை ஆக்ஷேபிக்கவந்த பூர்வபக்ஷிகளுக்கு பதிலாவது சொல்லப்படவேண்டும். அப்படியிருந் தால்தான் இந்த ஸூத்ரம் அதிகரணமாக ஆகும். இதற்கு முன் ஏதாவது ஒரு ஸூத்ரத்தால் ஏதாவது ஒரு விஷயம் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறதென்பதையோ காணோம். அப்படியிருந்தா லல்லவோ! இந்த ஸூத்ரம் **अधिकरण संगति,** 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌸𑌂𑌗𑌤𑌿 (அதிகரணஸங்கதி) யோடு கூடினதாகஆகும்? இந்த ஸூத்ரத்தில் தீர்மானிக்கப்படும் அர்த்தம் முன் ஏதாவது ஏற்பட்டிருக்கிற ஸித் தாந்தத்திற்கு வரும் தோஷங்களைப் போக்கடிப்பதற்காக ஏற்பட் டிருக்கிறதென்று சொல்வது ந்யாயமில்லை. ப்ரும்மவிசார சாஸ்த்ரத் திற்கு இந்த ஸூத்ரந்தானே உபோத்காதமான முதல் ஸூத்ரம். இதற்குமுன் ஸூத்ரம் ஏது? ஆகையால் '**अथातो ब्रह्मजिज्ञासा**' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரத்தில் விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், உத்தரபக்ஷம் அவைகள் அடங்கியிருப்பதாலும், அதிகரண ஸங்கதி இந்த அதிகரணத்திற்கு இல்லாததால் இந்த ஸூத்ரம் **अधिकरण,** 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 (அதிகரண) மாக ஆகாது என்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்—'**अथातो ब्रह्मजिज्ञासा**' '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் **अधिकरणं,** 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 (அதிகரணம்) தான். இந்த ஸூத்ரம் அனுபந்த சதுஷ்டய நிர்ணயகமான அதிகரணமானதால், ஸங்கதி வேண்டுமென்ற ஆவச்யதையில்லை. சாஸ்த்ரத்தினுடைய அர்த்தம் இருவகைப்படும். அவையாவன: ப்ரேக்ஷாவான்களுடைய (விசாரிக்கிறவர்) ப்ரவ்ருத் திக்கு அங்கபூதமான அர்த்தம் ஒன்று. ப்ரேக்ஷாவான்கள் ப்ரவ்ருத் தித்த பிற்பாடு அவர்களுடைய விசாரத்திற்கு விஷயமான அர்த்தம் ஒன்று. அநுபந்த சதுஷ்டயம் என்றது ப்ரேக்ஷாவான் களுடைய ப்ரவ்ருத்திக்கு அங்கபூதமான விஷயத்தை நிர்ணயம் செய்வதற்காக ஏற்பட்ட அதிகரணம். அதற்குப் பூர்வாதிகரண ஸங்கதி வேண்டாம். ப்ரவ்ருத்த (விசாரிக்க ஆரம்பித்த) புருஷ



னுடைய விசாரத்துக்கு விஷயமான அர்த்தத்தை நிர்ணயம் செய் கிறதற்காக ஏற்பட்ட அதிகரணத்துக்குத்தான் பூர்வாதிகரண ஸங்கதி வேண்டும். **सन्दिग्ध,** 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த) மான ச்ருத்யர்த்தத்தை நிர்ணயம் செய்கிறதற்காக ஏற்பட்ட ஸூத்ரங்கள் அதிகரணங்கள் என்று சொல்லப்படும். அந்த **सन्दिग्ध,** 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த) மான அர்த்தமும், ப்ரவ்ருத்திக்கு அங்கபூதமான அர்த்தமாக இருந்தால் அதை நிர்ணயம் செய்கிறதற்காக ஏற்பட்ட அதிகரணத்துக்கு உபோத்காத அதிகரணமென்று பெயர்; ஆனதால், அதற்கு விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், உத்தரபக்ஷம், இந்த நான்கினுடைய தேவை மாத்ரமே தவிர ஸங்கதியின் அபேக்ஷை வேண்டாம். ப்ரவ்ருத்த புருஷனுடைய விசாரத்திற்கு விஷயமான அர்த்தமாக இருந்தால், அதை நிர்ணயம் செய்கிறதற்காக ஏற்பட்ட அதிகரணங்கள் எவை யோ, அவைகளுக்குத்தான், விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், உத்தர பக்ஷம், ஸங்கதி என்ற இந்த ஐந்தினுடைய தேவை. இந்த '**जिज्ञा-साधिकरणं**' '𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌂' (ஜிக்ஞாஸாதிகரணம்) ப்ரவ்ருத் யங்கபூதமான அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்காக ஏற்பட்ட தால், உபோத்காதாதிகரணம் என்ற பெயரை யடைந்து, ஸங்கதி யைத் தவிர மற்ற அதிகரண லக்ஷணங்களோடு அலங்கரிக்கப்பட்டு விளங்கி வருகிறது. உபோத்காதமாக இல்லாதிருக்கும்பொழுது ஸங்கதியில்லாமலிருந்தால், அதிகரண லக்ஷணம் பூர்த்தியாக இல்லாத படியால் அதிகரணமில்லை; என்று சொல்லலாம். உபோத்காத சாஸ்த்ரத்தில் ஸங்கதியில்லை யென்பது, அதை அதிகரணமில்லை யென்று நிர்ணயம் செய்வதில் ஸரியான காரணமாக ஆகாது.

ஆகையால், ஸங்கதி இல்லாமலிருந்தாலும், உபோத்காதமான தாலும், ஸங்கதியைத் தவிர மற்ற நான்கு அதிகரண லக்ஷணங்கள் இருக்கிறபடியாலும், இந்த '**जिज्ञासासूत्रं अधिकरणं**' '𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂' (ஜிக்ஞாஸா ஸூத்ரம் அதிகரணம்) தான் என்பது ஸித்தாந்திகளின் ஸமாதானம்.

பூர்வபக்ஷம்:—'**यत्रयत्र जिज्ञास्यत्वं, तत्रतत्र सन्दिग्धत्वेसति सप्रयो-जनत्वं**' '𑌯𑌤𑍍𑌰𑌯𑌤𑍍𑌰 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌤𑍍𑌰𑌤𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌤𑍍𑌵𑍇𑌸𑌤𑌿 𑌸𑌪𑍍𑌰

யோஜநத்வம்' (யத்ரயத்ர ஜிக்ஞாஸ்யத்வம், தத்ரதத்ர ஸந்திக்தத்வே ஸதி ஸப்ரயோஜநத்வம்) என்று ஒரு அபாதிதமான (அடிக்கப்படாத) ந்யாயம்.

அதன் அர்த்தம்:—புருஷனுக்கு எது நிச்சயமாகத் தெரியாமல் ஸம்சயமாக இருக்கிறதோ, அத்துடன், அதை விசாரித்துத்தெரிந்து கொள்வதினால் அதினின்று ஒரு பலனும் ஏற்படக்கூடியதாக இருக்குமோ, அதுதான் புருஷனுடைய விசாரத்துக்கு அர்ஹமாக ஆகும். அதிலும் எந்தப்பதார்த்தத்தை நாம் விசாரிக்கிறோமோ அது ஸம்சயமுள்ளதாயும், பலத்துடன் கூடினதாயும் (அதாவது: இரண்டு விசேஷணங்களோடு கூடினதாகத்தான்) இருக்கவேண்டும். காக்கையின் பற்கள் புருஷனுக்கு ஸம்சயமுள்ளவைகளாகத்தான் இருக்கின்றன. ஆகிலும், பலவத்தாக இல்லாதபடியால் அதைப் புருஷன் விசாரிக்கிறதில்லை. அப்படியே, எதிரிலிருக்கும் குடம் முதலான வஸ்துக்கள் ஒரு பலத்தோடு கூடியவைகளாகவேயிருக்கின்றன. (அதாவது: குடத்தால் ஜலத்தைக்கொண்டுவந்து குடிப்பது என்ற பலன் குடத்தில் இருக்கிறதல்லவா?) ஆகிலும், அதில் புருஷனுக்கு ஸம்சயம் இல்லாததால் அதையும் புருஷன் விசாரிக்கிறதில்லை. இதனால், ஸம்சயம், பலம் இந்த இரண்டும் எந்த வஸ்துவினிடத்தில் இருக்கிறதோ அதைத்தான் புருஷன் விசாரிப்பான் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ப்ரும்மத்திலோ ஸம்சயமுமில்லை; பலமுமில்லை.

அதாவது: அத்வைதிகளின் மதத்தில் ஆத்மாவைக் காட்டிலும் ப்ரும்மம் வேறில்லாமையாலும், ஆத்மா ஸகலமானவர்களுக்கும் தான் என்று ப்ரத்யக்ஷஸித்தமாய் விளங்குவதாலும், ப்ரும்மமும் அப்படியே ப்ரத்யக்ஷமாகத் தெரிந்து நிச்சயிக்கப்பட்ட வஸ்து என்று ஒப்புக்கொள்ளவேண்டியது ஆவச்யகமானதால், ப்ரும்மத்தை सन्दिग्ध, ஸந்திக்த (ஸந்திக்த) வஸ்து என்று எப்படிச் சொல்லலாம்? ப்ரும்மம் ஸந்திக்தமானால் ஆத்மாவும் அவனவனுக்கு सन्दिग्ध, ஸந்திக்த (ஸந்திக்த)மென்றே சொல்லவேண்டுமல்லவா? ஆத்மாவுக்கும், ப்ரும்மத்திற்கும் பேதம் ஏது? அப்படியிருக்க, ப்ரும்மம் ब्रह्म, सन्दिग्धं; आत्मा, असन्दिग्धः; ப்ரஹ்மம், ஸந்திக்தம்; ஆத்மா, அஸந்திக்த: (ப்ரம்மம், ஸந்திக்



ம்; ஆத்மா, அஸந்திக்த:) என்று எப்படிச் சொல்லக்கூடும்? த்மாவைக் காட்டிலும் ப்ரும்மம் வேறானால் ப்ரும்மம் ஸந்திக்த மன்று சொல்லலாம்; அப்போது அத்வைதஹானி வந்துவிடுமே, து அத்வைதிகளுக்கு இஷ்டமாக இருக்குமா? ஆகையால் ஆத்மா ம் ப்ரும்மமும் ஒன்றுதான். ஆத்மா असन्दिग्ध, அஸந்திக்த (அஸந் க்த மானபடியால் ப்ரும்மமும் असन्दिग्धं, அஸந்திக்தம் (அஸந்திக்தம்) ான். ஆகையால், ப்ரும்மத்தினிடத்தில் ஒருவருக்கும் ஸம்சய ல்லையென்பது ஆயிற்று.

அத்துடன் ப்ரும்மத்தை விசாரிப்பதால், அத்வைதிகளால் சால்லப்படும் பந்தநிவ்ருத்தி என்ற பலத்தையடைய ஆகாசத்தைத் ான் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பந்தம் என்றால் ப்ரபஞ்ச மன்றே அத்வைதிகள் சொல்லுகிறார்கள். ப்ரபஞ்சமோ ப்ரத்யக்ஷ ாய் அனுபவிக்கிறபடியால் ஸத்யமென்றே தீர்மானிக்கவேண்டும். த்யமான ப்ரபஞ்சத்திற்கு ப்ரும்ம விசாரத்தால் உண்டாகும் நாநத்தால் நிவ்ருத்தியென்பது எப்படி? பொய்யான ஸர்ப்பத்திற்கு ஜ்ஜுவினுடைய ஞானத்தால் நிவ்ருத்தி ஏற்படும்; நிஜமாகவே ார்க்கப்படும் ஸர்ப்பத்திற்குப் பழுதையின் ஞாநத்தால் நிவ்ருத்தி ண்டா? அப்படியே இப்ரபஞ்சமும் உண்மையாகவே அனுபவிக்கப் படுகிறது. அதற்கு எப்படி ப்ரும்ம விசாரத்தால் உண்டாகும் ஞாநத்தால் நிவ்ருத்தி வரும்? ஆனால், அத்வைதிகள் இந்த ஜாக்ர ப்ரபஞ்சத்தை ஸ்வப்ன ப்ரபஞ்சத்திற்கு ஸமானம் என்றே श्यत्वं, த்ருச்யத்வம் (த்ருச்யத்வம்) என்ற ஒரு காரணத்தால் சொல்லிக்கொண்டு இதரவாதிகளை வஞ்சிக்கிறார்கள். அது மிகவும் தப்பானது. இந்த ஜாக்ரப்ரபஞ்சம் ஸ்வப்ன ப்ரபஞ்சத்திற்கு ஸமானமாக எப்படியாகும்? ஸ்வப்னத்திலோ ஒரு வஸ்து ஒரே விதமாகவே தோன்றுகிறது என்ற ந்யாயம் இல்லை. ஒருவன் ஸ்வப்னத்தில் முதலில் ஒரு மாமரத்தைக் கண்டான். பின்பு இரண்டு நிமிஷங்களுக்குள் அந்த மாமரத்தையே தென்னைமரமாகக் கண்டான்; பிறகு அதையே குதிரையாகவும், பிறகு அதையே யானையாகவும் நிமிஷத்துக்கு நிமிஷம் வெவ்வேறாக ஒரு வஸ்து வையே பார்க்கிறான். ஆகையால், ஸ்வப்னத்தில் ஒரு வஸ்து ஒரே

ப்ரகாரமாகத் தோன்றுகிறதென்பதில்லை. ஜாகரத்திலோ எந்த வஸ்துவை நாம் பார்த்தாலும் அந்த வஸ்து எப்போதும் அந்த வஸ்துவாகத்தான் தோன்றுகிறது. ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவாக ஸமயாந்தரத்தில் காணப்படுகிறதில்லை. ஆகையால் இப்படி ஒரே ரூபமாகவே எக்காலத்திலும் தோன்றுகிற இந்த ஜாகர ப்ரபஞ்சத்திற்கும், நிமிஷத்துக்கு நிமிஷம் வெவ்வேறாய்த் தோன்றுகிற ஸ்வப்ன ப்ரபஞ்சத்திற்கும் எவ்விதத்திலாவது ஸாம்யம் (வித்யாஸமில்லாத தன்மை) ஏற்படுமோ? இதை அத்வைதிகளிடத்தில் தான் கேட்கவேண்டும்.

" जागरप्रपञ्चः, स्वप्नप्रपञ्च विलक्षणः, एकरूपेण प्रतीयमानत्वात्,
यन्नैवं, तन्नैवं यथा स्वप्नप्रपञ्चः ॥

" 𑌜𑌾𑌗𑌰𑌪𑍍𑌰𑌪𑌂𑌚𑌃, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌪𑍍𑌰𑌪𑌂𑌚𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃, 𑌏𑌕𑌰𑍂𑌪𑍇𑌣𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌯𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌤𑌨𑍍𑌨𑍈𑌵𑌂, 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌪𑍍𑌰𑌪𑌂𑌚𑌃 "

(ஜாகரப்ரபஞ்ச:, ஸ்வப்நப்ரபஞ்ச விலக்ஷண:, ஏகரூபேண ப்ரதீயமாநத்வாத், யந்நைவம் தந்நைவம், யதா ஸ்வப்நப்ரபஞ்ச:)

என்ற அபாதிதமான அனுமான ப்ரமாணத்தால், அத்வைதிகளால் சொல்லப்படும் ஸ்வப்ன ப்ரபஞ்சத்திற்கும் ஜாகர ப்ரபஞ்சத்திற்கும் உள்ள ஸாம்யமானது அடிபட்டுவிடுகிறது. ஆகையால், ஜாகரப்ரபஞ்சம் ஸத்யமே. ஸத்யமான ஜாகர ப்ரபஞ்ச ரூபமான பந்தத்திற்கு ஒருக்காலும் ஞானத்தால் நிவ்ருத்தியென்பது ஏற்படாது. ஆகையால், பந்தநிவ்ருத்தி யென்ற பலமும் ப்ரும்ம விசாரத்தால் ஏற்படும் என்ற ஆசையும் வேண்டாம்.

" ब्रह्म, नविचार्यं, असन्दिग्धत्वेसति अप्रयोजनवत्वात् ,काकदन्तवत् "

" 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌨𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌂, 𑌅𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌤𑍍𑌵𑍇𑌸𑌤𑌿 𑌅𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌕𑌾𑌕𑌦𑌂𑌤𑌵𑌤𑍍 "

(ப்ரம்ம நவிசார்யம், அஸந்திக்தத்வேஸதி அப்ரயோஜநவத்வாத், காகதந்தவத்)



என்ற அனுமான ப்ரமாணத்தால், सन्दिग्ध, 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த)மாயும், பலவத்தாயும் இருக்கும் ப்ரும்மமென்ற விஷயம் இல்லாததாலும்,

" प्रपंचः, ज्ञानानिवर्त्यः, सत्यत्वात् "

" 𑌪𑍍𑌰𑌪𑌂𑌚𑌃, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌃, 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 "

(ப்ரபஞ்ச:, ஞாநாநிவர்த்ய:, ஸத்யத்வாத்)

என்ற அனுமான ப்ரமாணத்தால் பந்த நிவிருத்தி என்ற பலம் இல்லாததாலும், விஷய ப்ரயோஜனம் இல்லை என்ற காரணத்தால் இந்த ப்ரும்ம விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தகுந்ததன்று. அதாவது: ப்ரும்ம விசாரஞ் செய்யக்கூடாது; என்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்:—எது सन्दिग्ध, 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧 (ஸந்திக்த) மாயும், सफल, 𑌸𑌫𑌲 (ஸபல) மாயும் உள்ளதோ அதைத்தான் விசாரிக்க வேண்டுமென்பது ஸரியே; ஆகிலும், ப்ரும்மத்தினிடத்தில் सन्दिग्धत्वं, फल-वत्वं 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌤𑍍𑌵𑌂, 𑌫𑌲𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 (ஸந்திக்தத்வம், பலவத்வம்) இந்த இரண்டும் இல்லையென்று நிரூபணஞ் செய்தது மட்டும் தப்பு. ஆத்மாவைக் காட்டிலும் ப்ரும்மம் வேறில்லை என்றதால், தான் ப்ரும்மமென்ற நிச்சயம் புருஷனுக்கு ஏற்பட்டு விடுமென்றது விசாரிக்காமல் சொன்ன சொல். ஸ்வப்னவஸ்தையில் ஒரு ப்ராஹ்மணன் தான் சூத்ரனாகப் பிறந்திருப்பதாக ஸ்வப்னங்கண்டு, அதினின்றும் தன்னுடைய நிக்ருஷ்டமான சூத்ர ஜன்மாவை நினைத்துப் பார்த்துப் பரம பரிதாபத்துடன் உத்க்ருஷ்டமான 'ब्राह्मणजन्मा' '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌜𑌨𑍍𑌮𑌾' (ப்ராம்மணஜன்மா) நமக்கு எப்பொழுது ஏற்படும்? என்று ஆங்காங்கு ஸாதுக்களிடம் சென்று ப்ராம்மண ஜன்மாவை அடைவதற்கு ஏற்பட்ட உபாயங்களை விசாரிக்கின்றான். ப்ராம்மணனுடைய வைபவங்களும், அவனுக்கேற்பட்ட கர்மாக்களும், இன்னவென்று அந்த ஸ்வப்னவஸ்தையில் நிச்சயமாக அவனுக்குத் தெரியவில்லை. ஸாமான்யமாக ப்ராம்மணன் உத்க்ருஷ்டன் என்பது மாத்திரம் அவனுக்குத் தெரியும். அந்த ஸ்வப்னகாலத்தில் தான் ப்ராம்ம

ணன் என்ற ஞானமிருந்தால், ப்ராம்மண ஜந்மத்தைத் தான் அடைய விசாரிப்பனு ? அதற்கேற்பட்ட உபாயத்தையோ விசாரிக்கின்றுன். ஆகையால், அவனுக்கு, தான் ப்ராம்மணன் என்ற ஞானம் இல்லையென்பது நிச்சயம். உண்மையிலோ அவன் ப்ராம்மணன்தான். தான் ப்ராம்மணனுயிருந்தாலும், தான் ப்ராம்மணனென்று தெரிந்துகொள்ளாமல் ப்ராம்மண்யத்தின் பெருமைகளைத் தெரிந்துகொள்ளவும், அதற்குள்ள உபாயத்தை அநுஷ்டானம் செய்யவும், ஆங்காங்கு விசாரிக்கின்றுன். இந்த த்ருஷ்டாந்தத்தால், தன்னுடைய ஸ்வரூபத்திலேயே தனக்கு அக்ஞானம் உபாதிவசத்தால் ஏற்படலாமென்று தெரிகிறது. அதுபோல், ஆத்மாவே ப்ரும்மமாக இருந்தாலும் அவித்யையாகிற ராத்ரியில் ரஜோகுணமாகிற ஸூக்ஷ்ம சரீரத்தில் அபிமானியாக இருந்து, இல்லாத வஸ்துவை இருக்கிறதாகப் பார்க்கும் அநேக விசித்ரங்களுள்ள ஸ்வப்னவஸ்தையில், தான் கர்த்தாவாயும், போக்தாவாயும், ஸம்ஸாரியாயும் இருக்கப்பட்ட கேவல ஜீவனென்றும், தன்னைக்காட்டிலும் ப்ரும்மம் வேறென்றும் எண்ணி, அதனுடைய வைபவங்களையறியவும், அதின் தாரதம்யத்தையடையவும், ஆங்காங்கு உபாயத்தை விசாரித்துக்கொண்டிருக்கிறுன். தான் ப்ரும்மமாகவே இருந்தாலும் தன் ஸ்வரூபத்திலேயே அக்ஞானம் ஏற்படலாம். ராஜபுத்ரனுக்கு வேடர்களுடைய ஸம்பர்க்கத்தால் (சேர்க்கை) தான் ராஜா என்ற பாவம் மறந்துபோய், வேடன்என்ற பாவமே தடித்துத் தான் வேடன் என்ற அநுபவத்தோடே யிருக்குங்காலத்தில், அவனிடத்திலேயேயிருக்கிற ராஜத்வஞானம் அவனுக்கு இல்லாததுபோல, ப்ரும்மத்திற்கு அவித்யையினுடைய ஸம்பர்க்கத்தால் தான் ப்ரும்மம் என்ற பாவம் மறந்து, ஜீவன் என்ற பாவம் தடித்து, கர்த்தா, போக்தா, ஸம்ஸாரி என்றநுபவித்து வருங்காலத்தில், தன்னிடத்தில் இருக்கப்பட்ட ப்ரும்மத்வமும் தனக்கே வெளிப்படாமலிருக்கிறது. தன்னைக்காட்டிலும் ப்ரும்மம் வேறில்லாமலிருப்பதற்காக ப்ரும்மத்தினிடத்தில் அக்ஞானம் ஏற்படக்கூடாதென்றும் இல்லை. ஆகையால், அத்வைத மதப்படி, ஆத்மாதான் ப்ரும்மம்; ஆகிலும், தான்: ப்ரும்மம்தான் என்ற நிச்சயம் ஒருவருக்குமில்லை. இந்தப்ரகாரமாக ஆலோசித்து ப்ரும்மத்தினிடத்தில் 'सन्दिग्धत्वं'

179512

Regd No. M-2970. Regd. No. M-2970.


மாதா மாதம்

ஒரு ரூபாய் சேர்த்து வைத்தால்!

| | |
|---|---|
| 7 வருஷத்திற்குப் பிறகு | ரூ. 106-8-0 |
| 6 வருஷத்திற்குப் பிறகு | ரூ. 87-12-0 |
| 5 வருஷத்திற்குப் பிறகு | ரூ. 70-12-0 |
| 4 வருஷத்திற்குப் பிறகு | ரூ 54-6-0 |
| 3 வருஷத்திற்குப் பிறகு | ரூ. 39-8-0 |
| 2 வருஷத்திற்குப் பிறகு | ரூ 25-8-0 |

யாவரும் செய்யக்கூடியது ; மிகவும் மலிவானது வட்டியை கவனிக்கவும். "பலதுளி பெருவெள்ளம்".

பிக்ஸட் டிபாஸிட்டுகள் கீழ்கண்ட விகிதப்படி பெற்றுக்கொள்ளப்படும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 3 மாதங்களுக்கு | ... | 100-க்கு | 4 | வீதம் |
| 6 மாதங்களுக்கு | ... | 100-க்கு | 4½ | வீதம் |
| 1 வருஷத்திற்கு | ... | 100-க்கு | 5 | வீதம் |

ஒரு வருஷத்திற்கு மேல்பட்டதற்கு ஸ்பெஷல் விகிதங்கள்.

**இந்தியன் ரிலீப் பாங்கி லிமிட்டெட்,**

**1/99, கிடங்கு தெரு, சென்னை.**

*Advt. 11-V. 3.*


Edited and published by Thethiyur Subramanya Sastrigal, and printed at the Harisamaya Divakaram Press, Madura.